தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் வேலூர் மாவட்ட பிரிவு

அனுப்புநர்

திரு . அ பாலமுருகன்

மாவட்ட விளையாட்டு (ம)

இளைஞர் நலன் அலுவலர்

வேலூர்

பெறுநர்

முதன்மை கல்வி அலுவலர் அவர்கள்

வேலூர் மாவட்டம்

ந.க.எண் 117 / 2024 நாள் 24.08.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் தேசிய அளவில் நடத்தப்படும் போட்டிகளுக்கு இணையாக சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.. இவ்வாண்டில் நடத்தப்பட இருக்கும் போட்டிகளில் வெவ்வேறு புதிய விளையாட்டுக்கள் சேர்க்கப்பட்டு பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் மற்றும் அரசு ஊழியர்கள் என 5 பிரிவுகளில் 27 விளையாட்டுக்கள் 53 வகைகளில் மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவிலான "தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை" விளையாட்டுப் போட்டிகள் வரும் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் நடத்தப்படவுள்ளது.

இப்போட்டிகளில் கலந்து கொள்வதற்கான விவரத்தினை https://sdat.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக முன்பதிவு செய்து அதற்குரிய ஆவணங்களை சமர்ப்பித்து பதிவேற்றம் செய்திட வேண்டும். போட்டிகளில் பங்கேற்க **முன்பதிவு செய்திட கடைசி நாளாக நிர்ணயம்செய்யபட்டு 25.08.2024 இருந்தாநிலையில் தற்போது 02.09.2024 தேதி வரை** பதிவுக்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது என்பதனை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்

. இணையதளம் மூலம் முன்பதிவு செய்தவர்கள் மட்டுமே இப்போட்டியில் பங்கு பெற முடியும்

பள்ளி மாணவமாணவிகளுக்கு , 12 வயது முதல் 19 வயது வரையிலும் கல்லூரி மாணவ , மாணவிகளுக்கு 17 வயது முதல் 25 வயது வரையிலும், 15 வயது முதல் 35 வயது வரை பொதுப்பிரிவினருக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு மட்டும் விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்பட உள்ளது.

எனவே, விளையாட்டில் ஆர்வம் உள்ள அனைவரும் தவறாமல் https://sdat.tn.gov.in என்ற இணையதளம் மூலம் முன்பதிவு செய்து கொள்ளலாம். தாங்களாகவோ, தங்கள் பள்ளி, கல்லூரி மூலமாகவோ முன்பதிவு செய்து கொள்ளலாம்.

மாநில அளவில் தனிநபர் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு முதல் பரிசாக ரூ.1 இலட்சமும், இரண்டாம் பரிசாக ரூ.75 ஆயிரமும், மூன்றாம் பரிசாக ரூ.50 ஆயிரமும் வழங்கப்படும். குழு போட்டிகளில் பங்கு பெற்று வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா ரூ.75 ஆயிரமும்,

இரண்டாம் பரிசாக தலா ரூ.50 ஆயிரமும், மூன்றாம் பரிசாக தலா ரூ.25 ஆயிரமும் பரிசாக வழங்கப்பட உள்ளது. மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் இவ்வாண்டுக்கான தனி நபர் மற்றும் குழுப்போட்டிகளுக்கான மொத்த பரிசுத்தொகை ரூ.37 கோடியாக உயர்த்தி வழங்கப்பட உள்ளது. இப்போட்டிகளில் வழங்கப்படும் சான்றுகள் மூலம் உயர் கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் சலுகைகளும் பெற இயலும் என்பதை தெரிவித்துகொள்கிறான்

மாவட்ட விளையாட்டு மற்றும்

இளைஞர் நலன் அலுவலர்,

வேலூர்